57

கிராமந்தோறும் சுயராஜ்யம்



விநோபா

சர்வோதயப் பிரசுரம்

57/1-57

Y2.ய m95 N157 77827

கிராமந்தோறும் சுயராஜ்யம்

OFFICE OF THE REGIST
JAN
MADRAS

ஆச்சாரிய வினோபா பாவே

சர்வோதயப் பிரசுராலயம்
(அகில பாரத சர்வ சேவாசங்கம்)
தஞ்சாவூர்

முதற் பதிப்பு—ஆகஸ்ட் '56—10,000
2-ம் ,, டிசம்பர் '56—10,000

விலை அணா 2

Kabeer Printing Works, Madras (3461)

பதிப்புரை

மகான் வினோபா சென்ற வருஷம் ஆகஸ்ட்-செப்டம்பரில் ஆந்திராவிலும், ஒரிஸ்ஸாவிலும் யாத்திரை செய்தபொழுது இருவிடங்களில் அருளிய அறிவுரைகள் இச்சிறு பிரசுரத்தில் அடங்கியுள்ளன. இவைகளில் ஆங்கிலேயர் ஆட்சி அகன்று சுயராஜ்யம் வந்ததும், அது நடைபெறும் விதமும், அதைச் சரியான வகையில் உருவாக்குவதற்கு மக்கள் செய்யவேண் டியவையும் கூறப்பட்டிருக்கின்றன. முதல் அறிவுரையில் நிர் வாகத்தில் கிராம மக்கள் பங்கு விவரிக்கப்பட்டிருக்க, இரண் டாவதில் கிராமத்தின் செல்வம் பெருகி கிராம மக்கள் பிறர் கை பாராது வாழ்வதற்குள்ள வழிவகைகள் விளக்கப்பட்டிருக் கின்றன. வினோபா அவர்கள் கடந்த ஏழு மாதமாக நம் தமிழ் கிராமங்களில் தினமும் கால் நடந்து, இதேபோன்ற கருத் துக்களை தினந்தோறும் புதுப்புது வகைகளில் கூறிவருகிறார்கள். இந்தக் கருத்துப் புரட்சி இயக்கத்தில் எல்லோரும் ஈடுபட்டு பூரண கிராம ராஜ்யத்தை ஏற்படுத்த முன்வருவார்களாக.

தஞ்சாவூர்
16—12—56

சர்வோதயப் பிரசுராலயம்
(அகில பாரத சர்வ சேவா சங்கம்)

பதிப்புரை

கடந்த ஐந்து வருஷ பூதான யாத்திரையை வரலாற்று நோக்குடன் கவனித்தால் மகான் விநோபாவின் கோரிக்கைகள் அனுபவத்தையும் இயக்கத்தின் வளர்ச்சியையும் அனுசரித்து மாறிக்கொண்டு வந்திருப்பது தெரியவரும். இத்தகைய மாறுதல்களுள் ஒன்றுக்கு உத்தரப் பிரதேச யாத்திரையில் மங்கரோட் என்ற கிராமம் முழுமையுமே தானமாகக் கிடைத்தது காரணமாய் இருந்திருக்கிறது. பின் பல பிரதேசங்களிலும், தமிழ் நாட்டிலும்கூட சில கிராமங்கள் பூர்ணமாக தானம் கிடைத்துள்ளன. ஆனால் ஒரிஸ்ஸா பிரதேசந்தான் ஆயிரத்திற்கதிகமான கிராமங்களை தானமளித்து நாட்டிற்கே வழிகாட்டி இருக்கிறது. பூதான இயக்கத்தில் கிராமதானமே இறுதிக் கட்டமெனப்படுகிறது. ஆகையால் தமிழ் நாட்டில் மகான் விநோபாவின் பாதயாத்திரை நடந்துவரும் இக்காலத்தில் ஒரிஸ்ஸா பிரதேசத்தில் பெரிய அளவில் கிராமதானம் எவ்வாறு நடந்தது, அதன் விளைவுகளென்ன, அதையடுத்து பூதான, நிர்மாண ஊழியர்கள் செய்யவேண்டியவை யாவை என்னும் விஷயங்களை சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறும், இந்நூலை தமிழ் மக்களுக்குப் பெரிதும் பயன்படுமென்று கருதி வெளியிடுகிறோம். பூதான நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டிருப்போரும், பொது மக்களும் இதைப் படித்துப் பயன் பெறுவார்களென்று நம்புகிறோம்.

குறைந்த காலத்தில் இந்நூலை ஹிந்தியிலிருந்து மொழி பெயர்த்துத் தந்த ஸ்ரீ பிரபாகரன் அவர்களுக்கு எமது நன்றி.

தஞ்சாவூர்
3–9–56

சர்வோதயப் பிரசுராலயம்
(அகில பாரத சர்வ சேவா சங்கம்)

பொருளடக்கம்

			பக்கம்
I	நிலமனைத்தும் ஆண்டவனுக்குச் சொந்தம்	...	1
II	நிலப் பிரச்சனை – மாறுபட்ட கருத்துக்கள்	...	8
III	வினோபாஜியின் கொடை	...	12
IV	மங்கரோட்டிலிருந்து கோராப்புட்டுக்கு	...	18
V	கோராப்புட்டின் தீரம்	...	25
VI	பாத யாத்திரையில் அனுபவங்கள்	...	31
VII	கனவு நனவாகிறது	...	38
VIII	எழுச்சியடைந்தோர் சக்தி திரட்டுகின்றனர்!	...	42
IX	நிர்மாணத் திட்டம்	...	49
X	நிலப்பங்கீட்டின் சில அனுபவங்கள்	...	52
XI	பயிர்த்தொழிலும் பசுவளர்ப்பும்	...	56
XII	சுரண்டலற்ற சமுதாயம்	...	65
XIII	கதரும் கிராமக் கைத்தொழில்களும்	...	71
XIV	கல்வி	...	76
XV	ஆரோக்கியமும் துப்புரவும்	...	82
XVI	கிராம ராஜ்யமும் அரசாங்கமும்	...	86
XVII	புனரமைப்பு வேலைகள் பூர்த்தி அடைந்தால்...!	...	92
XVIII	எதிர்காலம் எப்படி?	...	98

கிராமந்தோறும் சுயராஜ்யம்

I

சுயராஜ்யம் பெற்ற பிறகு தம் நிலை திருந்துமென்று மக்கள் எதிர்பார்த்தார்கள். இவ்வாறு அவர்கள் எதிர் பார்த்ததில் தவறு ஒன்றுமில்லை. சுயராஜ்யத்தில் மக்கள் நிலை திருந்தாவிடில் அந்த சுயராஜ்யத்திற்கு மதிப்பேது? ஆகையால் கிராமத்தின் நிலை திருந்துமென்று மக்கள் எதிர்பார்த்தது சரியே.

நீங்களே உங்களுக்கு ராஜா

ஆனால் சுயராஜ்யம் வந்தபின் நம் நிலையைத் திருத்துதல் நம் கையிலேயே இருக்கிறதென்பதை மக்கள் புரிந்து கொள்ளவில்லை. பழைய காலத்தில் முஸ்லிம்கள் ஆட்சியும், பின் ஆங்கிலேயர் ஆட்சியும் நடந்ததுபோல் இப்பொழுது காங்கிரஸின் ஆட்சி வந்திருக்கிறதென்று அவர்கள் எண்ணிக் கொண்டார்கள். ஆனால் முஸல் மான்கள் ஆட்சியிலோ ஆங்கிலேயர் ஆட்சியிலோ, அல்லது வேறு எந்த அரசர் ஆட்சியிலோ உங்கள் ஓட்டை எவரும் கேட்டதில்லை. அவையெல்லாம் பழைய கால முறையில் நடந்த ஆட்சிகள்; ராஜாக்களோ, சுல்தான்களோ நடத்திய ஆட்சிகள். ஆனால் இப்பொழு துள்ள சுயராஜ்யம் நம் மக்களின் ஆட்சியாகும். இங்கே ஆட்சி நடத்துபவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியர்கள். "நீங்கள் உங்கள் விருப்பம்போல் ஆட்சி நடத்துங்கள். ஆட்சி நடத்துவதற்கு நீங்கள் விரும்பும் ஊழியர்களை நியமித்துக் கொள்ளுங்கள்' என்று இவை

களுக்கு வேண்டிய அதிகாரங்கள் உங்களுக்கு அளிக்கப் பட்டிருக்கின்றன" என்றெல்லாம் சொல்லி உங்களிடம் ஓட்டுக் கேட்டார்கள். நீங்கள் ஓட்டும் அளித்து ஐந்து வருஷங்களுக்கு வேலை பார்க்கவென உங்கள் ஊழியர்களை நியமித்துக் கொண்டீர்கள். விவசாயி ஒரு வருஷத்திற் கென பண்ணையாளை அமர்த்திக் கொள்ளுகிறார். வருஷம் முழுவதும் அந்த ஆள் நன்றாய் வேலை செய்தானென்று வருஷ முடிவில் பார்க்கையில் தெரியவந்தால் அடுத்த வருஷத்திற்கும் அவனையே தொடர்ந்து வேலைக்கு வைத்துக் கொள்ளுகிறார். அவ்வருஷத்தில் அவன் வேலை அவ்வளவு திருப்திகரமா யில்லாவிட்டால் அடுத்த வருஷத்திற்கு வேறொருவனைப் பார்த்து அமர்த்திக் கொள்ளுகிறார். அதேபோல நீங்கள் ஐந்து வருஷங்களுக் கென உங்கள் ஊழியர்களைப் பொறுக்கியெடுத்து அமர்த்தி யிருக்கிறீர்கள். அவர்களின் வேலை திருப்தியாய் இருப் பதாய் உங்களுக்குப்பட்டால் அவர்களையே மறுமுறையும் அமர்த்துவீர்கள். இல்லையேல் வேறு ஆட்களைப் பொறுக் கிக் கொள்வீர்கள்.

இதன் பொருளென்ன? இங்கே அமர்ந்திருக்கும் நீங்கள் அனைவரும் எஜமானர், இந்நாட்டு மன்னர் என்பதே. ஆனால் உங்களில் ஒவ்வொருவரையும் தனித் தனியாய் எஜமானரென்று சொல்லுவதற்கில்லை. நீங்கள் எல்லோரும் சேர்ந்தே எஜமானர் ஆகிறீர்கள். இவ்வாறு நீங்கள் எஜமானராக என்னவோ ஆகிவிட்டீர்கள். ஆனால் உங்கள் கைக்கு அதிகாரம் வந்திருப்பதை நீங்கள் உணர வில்லை. ஏனெனில், இவையெல்லாம் ஒரு நாடகம்போல் நடத்தப்பட்டது. உங்கள் அபிப்பிராயம் கேட்டார்கள்; நீங்களும் அபிப்பிராயம் சொன்னீர்கள். ஒரு வீட்டில் நாலைந்து வயதே ஆன விவரந்தெரியாத பிள்ளைகளிருப் பதாய் வைத்துக் கொள்ளுவோம். அவர்களிடம் வீட்டு

நிர்வாகம் எப்படி நடக்கவேண்டும் என்று பெற்றோர் கேட்டால், அவர்களிடம் ஓட்டுக் கொடுக்குமாறு சொன்னால் அவர்கள் எப்படி ஓட்டுக் கொடுப்பார்கள்? அவர்கள், "நீங்கள் செய்வது என்ன கேலிக் கூத்தாக, நாடகமாக இருக்கிறதே! நீங்கள் எங்கள் பெற்றோர் அல்லவா? எங்களுக்கு நன்மையானவற்றை நீங்கள்தானே பார்த்துச் செய்யவேண்டும்?" என்றுதானே சொல்லுவார்கள்? அவ்வாறே மக்கள் காங்கிரஸ்காரரிடம் சொன்னார்கள். "நீங்கள் பெரியவர்கள்; எங்களுக்குப் பணி புரிந்திருக்கிறீர்கள். எங்கள் தாயையும் தந்தையையும் போன்றிருப்பவர்கள். ஆகையால் உங்கள் உசிதம்போல் ஆட்சி நடத்துங்கள்" என்றார்கள். ஒருபுறம் அவர்கள், "நாங்கள் உங்கள் ஊழியராக விரும்புகிறோம். உங்களுக்கு இஷ்டமிருந்து எங்களை வேலைக்கு அமர்த்தினால் நாங்கள் வேலை செய்கிறோம்" என்று சொல்ல, மறுபுறம் இவர்கள், "நீங்களே எங்களுக்குத் தாயும் தந்தையுமாகையால் எங்கள் நன்மைக்கானவற்றை உங்களுக்கு நாங்கள் என்ன சொல்லப்போகிறோம்?" என்றார்கள்.

அதிகாரம் யாரும் கொடுத்து எவருக்கும் கிடைப்பதல்ல. அது ஒவ்வொருவருக்கும் தம் அகத்திலிருந்தே கிடைக்கவேண்டியதொன்று. பார்க்கப் போனால் இந்திய மக்கள் முட்டாள்களல்ல, போதுமான அறிவு படைத்தவர்களே. சில வருஷங்களுக்கு முன் நடந்த அந்தப் பொதுத் தேர்தலையே எண்ணிப் பாருங்களேன். அது எவ்வளவோ அழகாக நடந்தது. பலர் இங்கே தேர்தலில் என்னென்ன நடக்குமோ, எவ்வளவு சண்டைகள் நடந்து எத்தனை மண்டைகள் உடையுமோ என்றெல்லாம் பயந்து கொண்டிருந்தும் அவ்வாறு எதுவுமே நடக்கவில்லை. வெளி நாட்டவரெல்லாம் இந்திய மக்களுக்கு எழுத்து வாசனையே இல்லாதிருந்தும் இவ்வளவு ஒழுங்காக,

அழகாக எவ்வாறு இவர்களால் தேர்தல் நடத்த முடிந்த தென்று மூக்கின்மேல் விரலை வைத்தார்கள். இவ்வாறு நடந்ததற்குக் காரணம் இந்திய மக்கள் பத்தாயிர வருஷ அனுபவமுள்ளவர்களாயிருந்ததே. இவர்களுக்கு எழுத்து வாசனை இல்லைதான். ஆனால் இவர்களுக்குள்ள அனுபவம் பெரிதாகையால் இவர்கள் பேரறிவாளிகள், ஞானிகள். இதனாலேயே இங்கே மிகவும் சீரிய முறையில் தேர்தல் நடந்தது.

இந்திய மக்கள் அறிவாளிகளாயிருந்தும், எத்தனையோ ஆண்டுகளாக அவர்கள் அடிமைவாழ்வில் கிடந்துழன்று பழகிப் போய்விட்டமையால் அரசாங்கம் தாய் தந்தையரைப்போல நமக்கு வேண்டியவைகளைச் செய்யும் என்று எண்ணுகிறார்கள். ஆகையால் அவர்கள் கைக்கு அதிகாரம் வந்துள்ள இப்பொழுது 'உண்மையில், நம் கையில் அதிகாரமிருக்கிறது' என்பதை அவர்கள் உணர வேண்டும். தாய்க்குரிய அதிகாரத்தை, உரிமையை அவளுக்கு எவரேனும் அளிக்கிறார்களா? அவள் தன்னுள்ளேயே தாய்மையை உணருகிறாள். சிங்கத்தை எவரேனும் வனராஜனாக நியமித்தார்களா? அது தானே தனக்குள்ள அதிகாரத்தை உணருகிறது. அவ்வாறே மக்கள் தாமே சுயராஜ்யத்தினால் தாம் பெற்றுள்ள சக்தியை உணர வேண்டும். இதை அவர்கள் உணருவது எங்ஙனம்? ஒவ்வொரு கிராமத்தவரும் தில்லிக்குப் போய் அதிகாரம் செலுத்தலாமா? கூடாது. அந்தந்த கிராமத்தவர் அவரவர் கிராமத்தின் நிர்வாகத்தை நடத்தவேண்டும். அவ்வாறு நடத்தினால் அவர்களுக்கு நாட்டை ஆளுவதில் அனுபவம் ஏற்படும்.

பணியினுல் வரும் அதிகாரம்

இந்தக் காலத்தில் நடைபெறும் ஆட்சியை 'அரசாட்சி' என்று கூருமல் 'குடியாட்சி' என்றே கூற வேண்டும். இது குடிகளால், மக்களால் நடத்தப்படுவது. பண்டைக் காலத்தில் மக்களை அடக்கி வந்தவனே அரசனுயிருந்தான். சிங்கம் காட்டு ராஜாவெனப்படுகிறது. அதாவது, காட்டிலுள்ள பிற பிராணிகளைத் தின்று ஏப்பம் விடுவதே அங்கே ராஜாவெனப்படுகிறது. வடமொழியில் மிருகங்களின் அரசனுன சிங்கம் மிருகராஜன் எனப்படுகிறது. அந்த ராஜனைக் காணவேண்டியதுதான், உடனே எல்லா மிருகங்களுக்கும் வெடவெடவென நடுக்கத் தொடங்கிவிடும். இம்மாதிரியான அரசாட்சி இப்பொழுது நடைபெருது. இப்பொழுதுள்ள ஆட்சி ஊழியத்தின் ஆட்சியாகவே இருக்கக்கூடும். தாய்க்கு வீட்டிலுள்ள அதிகாரமென்ன? குழந்தைக்குப் பசியெடுத்தால் அதற்குப் பாலூட்டுதல் தாய்க்குள்ள முதல் அதிகாரம். குழந்தையை முதலில் தூங்கச் செய்துவிட்டு, கண் வளர்த்தி விட்டுப் பிறகு தான் உறங்குதல் அவளுக்குள்ள இரண்டாம் அதிகாரம். குழந்தை நோயுற்ருல் இரவில் கண் விழித்திருந்து அதைப் பார்த்துக்கொள்ளுதல் மூன்ரும் அதிகாரம். வீட்டில் உணவு குறைவாயிருந்தால் முதலில் குழந்தைக்கு உணவருத்தலும் அதன்பின் தனக்கு எதுவும் எஞ்சாவிட்டால் பட்டினி கிடத்தலும் அவளுக்குள்ள நான்காம் அதிகாரம். இன்று நாம் பெற்றிருப்பது தாய்நாட்டின் ஆட்சி, தாய் ஆட்சி அல்லவா? இது தாயாட்சி என்பதை நாம் கிராமந்தோறும் காட்ட வேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள அறிவாளிகளும், செல்வர்களும் அனுபவிகளும் கிராமத்திற்குத் தாயும் தந்தையுமாகி கிராமத்திற்குப் பணிபுரிவதன் மூலம் கிராம ஆட்

சியை நடத்த வேண்டும். அறிவாளியான தந்தை ' தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது ' என்பதுபோல் தம் பிள்ளைகள் தம்மிலும் பார்க்க அறிவாளிகளாக வேண்டுமென்றே விரும்புவார். தம் மக்கள் தம்மிலும் மேம்பாடுறும்பொழுதுதான் தந்தைக்கு மகிழ்ச்சியுண்டாகும். தன் சீடன் உலகில் தன் பெயரையே மக்கள் மறந்து போகுமாறு தன் அறிவாற்றல்களால் செய்யும்பொழுதுதான் ஆசிரியன் மகிழ்வான். மக்கள் ஆசிரியரின் பெயரை மறந்து சீடன் பெயரையே சொல்லும்பொழுதுதான் ஆசிரியன் மகிழ்வான். ' நான் என் சீடனுக்கு அறிவு புகட்டினேன். அதன் பிறகும் மக்கள் என் பெயரையே சொல்லிக் கொண்டிருந்தால் நான் அவனுக்கு என்ன தான் சொல்லிக் கொடுத்தேன் ? என் பெயர் மறைந்து போய் சீடனின் பெயர் எங்கும் வழங்கும்பொழுதுதான் நான் உண்மையான ஆசிரியனுவேன் ' என்ற வகையில் ஆசிரியனுக்குத் தோன்ற வேண்டும். ஆகையால் கிராமத்திலுள்ள அறிவாளிகள் தம்மிலும் பார்க்க மற்றவர்கள் அறிவாளிகளாகும் வகையில் பணியாற்ற வேண்டும். இவ்வாறு செய்தால் கிராம ராஜ்யம் ராமராஜ்யமாகிவிடும்.

நம் கிராமமே ஒரு ராஜ்யம்

சுயராஜ்யமென்ருல் நாடு அனைத்தின் ஆட்சி. பிற நாட்டின் அதிகாரம் நம் நாட்டின்மீது செலுத்தப் படாமையே சுயராஜ்யம். ஆனல் கிராமந்தோறும் சுயராஜ்யம் நடைபெறுமானல் அதை ராமராஜ்யம் எனல் வேண்டும். கிராம மக்கள் அனைவரும் அறிவாளிகளாகி எவர் மீதும் ஆட்சி புரிவதற்கு அவசியமில்லாது போகும்பொழுது அது ராமராஜ்யமாகி விடுகிறது. கிரா

மத்தில் நடக்கும் சண்டை சச்சரவுகள் நகரத்திலுள்ள கோர்ட்டுக்கு விசாரணைக்காகப் போய் நகரத்தவர் அவற்றை விசாரித்துத் தீர்ப்புக் கூறுவதற்கு அடிமை வாழ்க்கை, அந்நியர் ஆட்சி என்று பெயர். கிராமத்தின் சண்டை சச்சரவுகளை கிராமத்திலேயே தீர்த்துக் கொள்ளுதல் சுதந்திரம் அல்லது சுயராஜ்யமெனப்படும். கிராமத்தில் சண்டை சச்சரவுகளே நிகழாத நிலை ராமராஜ்யமாகும். நாம் முதலில் கிராம ராஜ்யத்தை அமைத்து, பிறகு அதை ராமராஜ்யமாக்க வேண்டும். நாட்டில் சுயராஜ்யம் அமைந்து விட்டது. இனி நாம் கிராம ராஜ்யத்தை உருவாக்க வேண்டும். இதனாலேயே நான் கிராமங் கிராமமாய்ச் சென்று, "உங்கள் கிராமத்திற்கு இதனால் நன்மையுண்டு. இது பற்றி நீங்களே யோசியுங்கள். உங்கள் கிராமத்தையே ஒரு ராஜ்யமென்று எண்ணுங்கள். நீங்கள் இப்பொழுது 'பாரத மாதாவுக்கு ஜே!' என்று கோஷிப்பது போல் உங்கள் 'கிராமத்திற்கு வெற்றி!' என்று கோஷியுங்கள்" எனச் சொல்லி வருகிறேன்.

ஒவ்வொரு கிராமத்திற்கும் வெற்றி என்றால் நாட்டிற்கும் வெற்றியாகும். நம் உடலின் அவயவங்கள் ஒவ்வொன்றும் இயங்குமானால் முழு உடலும் இயங்கும். கண்ணும், காதும், காலும், கையும், பற்களும் நன்கு வேலை செய்தால் முழு உடலும் நன்கு வேலை செய்யும். இவைகளில் ஏதேனுமொன்று பிணியுற்று இயங்காதிருந்தால் உடலின் வேலை தடைப்படும். கண்மட்டும் தன் வேலையைச் செய்யாது மற்ற எல்லாம் வேலை செய்யும் உடலுள்ளவனை நாம் குருடனென்கிறோம். காது மட்டும் வேலை செய்யாது மற்ற உடல் முழுவதும் வேலை செய்யும் ஒருவனைச் செவிடனென்கிறோம். அவ்வாறே கிராமம் முழுமையும் தன் பணிகளை நன்கு

புரிந்து கிராமந்தோறும் சுயராஜ்யம் அமைந்து விடு மானல் நம் சுயராஜ்யம் நன்கு நடப்பதாய்க் கொள் ளலாம். நாம் ஒவ்வொரு கிராமத்திலும் ஆட்சியை நடத்த வேண்டும். ஒரு நாட்டின் அரசாங்கத்திலுள்ள அத்தனை இலாகாக்களும், அவ்வளவு வேலைகளும் ஒரு கிராமத்திலும் இருக்கவேண்டும், நடக்கவேண்டும். அங்கே சுகாதார இலாகா இருக்கிறதென்ருல் கிராமத் திலும் சுகாதார இலாகா இருக்கவேண்டும். அங்கே கைத்தொழில் இலாகா, விவசாய இலாகா, கல்வி இலாகா, நீதி இலாகா ஆகியவை உள்ளனவென்ருல் கிராமத்திலும் அவை அனைத்தும் இருத்தல் வேண்டும். அங்கே வெளி நாட்டிலாகா ஒன்றிருப்பதைப் போல் கிராமத்திலும் வெளிக் கிராமங்களுடனுள்ள தொடர்பைக் கவனிக்க ஒரு இலாகா இருக்கும்.

கிராமந்தோறும் சர்வ கலாசாலை

கிராமந்தோறும் கலாசாலைகள் அமைய வேண்டும். கிராமந்தோறும் சர்வகலாசாலைகள் அமைய வேண்டும். இதுவே உண்மையான கிராம ராஜ்ய மென்பது. என் னிடம் ஒருவர், "ஒவ்வொரு கிராமத்திலும் ஆரம்பப் பள்ளிகளும், பெரிய கிராமங்களில் உயர்தரப் பள்ளி களும், விசாகப்பட்டணம் போன்ற நகரங்களில் கல்லூரி களும் அமைய வேண்டும்" என்று சொன்னர். அதற்கு நான் கடவுளது திருவுள்ளம் இவ்வாறிருக்குமாளுல் கிராமங்களில் பத்து வயது வரை ஆன பிள்ளைகள் மட்டுமே இருக்கவும், அதற்கு மேல் பதினைந்து, இருபது வயதுவரையுள்ளவர்கள் பெரிய கிராமங்களிலும், அதற்கு அதிகம் வளர்ந்தவர்கள் விசாகப்பட்டணம் போன்ற நகரங்களில் வாழவும் அவர் விதித்திருப்பார். ஆனல் பிறந்தது முதல் மரிக்கும் வரை எல்லா விவகாரங்களும்

கிராமத்திலேயே நடக்கையில் கல்வி பெறுவதற்கான முழு ஏற்பாட்டையும் கிராமத்திலேயே ஏன் செய்ய லாகாது? ஒரு மாகாணத்திற்கு ஒரு சர்வ கலாசாலை இருந்தால் போதுமென்று எண்ணும் இவர்களது தரித்திர புத்தியை என்னென்பது! எனது திட்டத்திலோ கிராமந்தோறும் சர்வகலாசாலைகள் இருக்கும். கிரா மத்தை ஒரு தனித்துண்டாகவா வைப்பது? நான்கு வருஷப்படிப்பு என்ற ஒரு துண்டை கிராமத்திலும் அதற்கு மேல் படிக்க வேண்டுமென்றால் அவர்கள் கிராமத்தை விட்டு வெளியேறவும் வேண்டியிருப்பது சரியாவென்று யோசிக்க வேண்டும். இவ்வாறு செய்தல் அர்த்தமில்லாத ஏற்பாடே. என் கிராமத்திலேயே எனக்குக் கல்வி பூரணமாய்க் கிடைக்க வேண்டும். இந்த என் கிராமம் ஒரு துண்டல்ல, பூரணமானது. पूर्णमदः पूर्णमिदं (பூர்ண மத: பூர்ணமிதம்) 'அது பூரணமானது, இது பூரணமானது.' இவர்கள் இது ஒரு துண்டு, அது இன்னொரு துண்டு; இவையெல்லாம் சேர்ந்து பூரண மாகுமென்று சொல்லுகிறார்கள். நம் திட்டத்திலோ இவ்வாறு துண்டுகளைச் சேர்த்துப் பூரணமாக்கும் பேச்சே கிடையாது. ஒவ்வொரு கிராமத்திலும் ஆட்சி யின் எல்லா இலாகாக்களோடும் அமைந்த பரிபூரண ராஜ்யம் ஏற்பட வேண்டுமென்பது நம் விருப்பம்.

இவ்வாறு ஒவ்வொரு சிறு கிராமத்திலும் ஆட்சி நடைபெறுமானால், ஒவ்வொரு கிராமத்திலும் ஆட்சி நடத்துவதில் வல்லவர்களின் குழு அமைந்திருக்கும். கிராமந்தோறும் அனுபவசாலிகள் இருப்பார்கள். தில்லி வாலாக்களுக்கு ராஜ்ய நிர்வாகத்தில் எப்பொழுதேனும் சிரமந்தோன்றினால், 'ஒன்றிரண்டு கிராமங்களுக்குப் போய் அக் கிராம மக்கள் எவ்வாறு ஆட்சி நடத்துகிறார் களென்று பார்த்துத் தெரிந்து கொள்வோமே' என்று

நினைப்பார்கள். ஏனெனில், அப்பொழுது கிராமந் தோறும் ஆட்சிக் கலையில் வல்லுநர்கள் இருப்பார்கள். ஆகையால் கிராமந்தோறும் கலாசாலைகள் அமைய வேண்டும். இன்றோ "கிராமங்களில் ஆட்சிக்கலை தெரிந்தவர்களே இல்லை; ஜில்லாக்களில் கூட ஆட்சிக் கலை வல்லுநர் கிடைத்தல் அரிதாயிருக்கிறது" என் கிறார்கள். ஆந்திர நாடெங்கும் தேடினாலும் ஆட்சிக்கலை அறிந்தவர்கள் ஒரு சிலரேதான் கிடைப்பார்களாம். நீங்கள் சுயராஜ்யம் நடத்த ஆசைப்படுகையில் ஆட்சிக் கலையை அறிந்தவர்களுக்கே பஞ்சமென்றால் வேலை எவ்வாறு நடக்கும்? ஆகையால் ஒவ்வொரு கிராமத் திலும் ஆட்சிக்கலை அறிந்தவர்கள் இருக்கவேண்டும். இன்றைய நிலைமையோ படுமோசம். பாருங்களேன்— பண்டித நேரு ஒரு சமயம், "எனக்கு பிரதம மந்திரிப் பதவியிலிருந்து சிறிது ஓய்வு கொடுங்கள்" என்று சொல்லி வைத்தார். அவ்வளவு தான், எல்லோருக்கும் ஒரே திகிலாகி விட்டது. "ஐயோ! நீங்களில்லாவிட்டால் எங்கள் காரியங்கள் எப்படி நடக்கும்?" என்று கூச்ச லிடத் தொடங்கி விட்டார்கள். இத்தகைய நிலையை சுயராஜ்யம் எனலாமா? பண்டித நேரு எனக்குச் சிறிது ஓய்வு அளியுங்களென்று சொல்லியதும், "சரிதான். நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் இது வரை எங்களுக்கு எவ்வளவோ செய்திருக்கிறீர்கள். ஓய்வு பெற உங்களுக்கு உரிமை உண்டு" என்று சொல்லக் கூடிய நிலையில் மக்களிருக்கும்பொழுது தான் உண்மை சுயராஜ்யம் வந்ததாகும்.

பரவலான அதிகாரம்

நாம் இவ்வகையில் எல்லாம் செய்யவேண்டும். தில்லி நகரில் குவிந்துள்ள அரசாங்க அதிகாரத்தைக் கிராமங்

களுக்குப் பகிர்ந்து தரவேண்டும். நாம் ஆண்டவனுக்கு அடிமைகளாகையால், கடவுள் பக்தி யுள்ளவர்களாகை யால் கடவுளையே உதாரணமாகக் கொள்ளுவோம். ஸ்ரீமந் நாராயணன் அறிவு முழுவதையும் வைகுண்டத்திலேயே சேர்த்து வைத்துக் கொண்டு எந்த உயிர்ப் பிராணிக்கும் அறிவே அளிக்காதிருந்து விட்டால் உலகம் எவ்வாறு இயங்கும்? அப்பொழுது ஒரு மனிதனுக்கு அறிவு தேவைப்படுமானல் வைகுண்டத்திற்குத் தந்தி கொடுத் துச் சிறிது அறிவு பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். இன்று உங்கள் மந்திரிகளுக்கே இடத்திற்கு இடம் விமானத்தில் பறக்க வேண்டியிருக்கையில் பகவானுக்கு எங்கெல்லாம் எப்படிப் பறக்க வேண்டியிருக்குமோ, சொல்லமுடியாது. ஆனல் பகவான் புத்திசாலித்தனமாக எல்லோருக்குமே அறிவைப் பகிர்ந்து கொடுத்து விட்டார். மனிதனுக்கும், குதிரைக்கும், கழுதைக்கும், பாம்புக்கும், தேளுக்கும், புழுவுக்கும், எல்லாவற்றிற்குமே அறிவை அளித்துவிட்டார். எந்த இடத்திலுமே அவர் அறிவை ஒருமிக்கச் சேர்த்து வைக்கவில்லை. இதனலேயே பகவான் பாற்கடலில் கவலையற்றுத் துயில் கொள்வதாய்ச் சொல்லப்படுகிறது. நம் மந்திரிகள் இவ்வாறு உறங்க முடியுமா? ஆனல் பகவான் அங்கே இருக்கிருரா இல்லையா என்றுகூட எவரும் சொல்லமுடியாத வகையில் அவர் துயில் கொண்டிருக்கிருர். அதனல் நம் இந்தச் சகோ தரர்கள், "அவர் இல்லவே இல்லை. ஏனெனில் அவர் அதிகாரம் செலுத்துவதாகவே தெரியவில்லையே!" என் கிருர்கள். ஆனல் தம்மை எவரும் மதித்தாலும் சரி, மதியாவிட்டாலும் சரி என்று அவர் தம் பேரருள் காரண மாகக் கவலையற்று உறக்கம் கொண்டிருக்கிருர். இதே வகையில் தில்லியிலுள்ளவர்கள் உறங்கும்பொழுது தான் உண்மை சுயராஜ்யம் நடப்பதாகும். தில்லி பாற்கடலாகி

அதில் நம் பிரதம மந்திரி கவலையற்று உறங்குகிறார் என்னும்பொழுதுதான் நமக்கு உண்மை சுயராஜ்யம் வந்ததாக நான் கொள்வேன். ஆனால் இன்றோ நம் பிரதம மந்திரி தினமும் 18 மணி நேரம் கண் விழித்து வேலை செய்வதாய்க் கேள்விப் படுகிறோமே! இதுவும் ஒரு சுயராஜ்யமா?

முன்பு அதிகாரம் லண்டனில் இருந்தது. இப்பொழுது அது அங்கிருந்து மூட்டை கட்டப்பட்டு தில்லிக்கு வந்திருக்கிறது. இவ்வாறு வந்தது நம் நல்ல காலமே. ஆனால் வந்த சரக்கு தில்லியிலேயே தங்கிப் போய்விட்டது. இப்பொழுது அந்த மூட்டையைப் பிரித்துக் கிராமந்தோறும் விநியோகிக்க வேண்டும். நாம் மக்களுக்குச் சுய ஆட்சியைப் போதிக்கவேண்டும். இந்த வேலையெல்லாம் செய்தாக வேண்டியிருக்கிறது. இதற்குத் தான் 'பரவலான ஆட்சி' என்று பெயர். இப்பொழுது ஒரே இடத்தில் குவிந்துகிடக்கும் ஆட்சியைக் கூறிட்டுக் கிராமந்தோறும் விநியோகிக்க வேண்டும். கிராமவாசிகள் அனைவரும் ஆட்சிக்கலையில் வல்லுநராகி கிராமங்களில் உள்ளவர்கள் தமக்குள் சண்டையே இடாதிருக்கும் பொழுது ஆட்சியே அற்றுப்போக, ராமராஜ்யம் ஏற்பட்டு விடும்.

நாம் இவற்றையெல்லாம் செய்ய வேண்டும். இதன் லேயே இப்பொழுது பூமிதான யக்ஞம் ஆரம்பமாகியிருக் கிறது. நீங்கள் உங்கள் ஊர்களைச் சீர்திருத்துவதற்குச் சித்தமாக வேண்டும். உங்களிடையே நிலமில்லாதவர் களுக்கு நிலம் தரவேண்டும். நிலம் எங்கிருந்து கொடுப் பீர்கள்? பிற கிராமங்களிலிருந்து நிலத்தைக் கொண்டுவர முடியுமா? உங்கள் கிராமத்தின் நிலத்திலேயே ஒரு பகுதியை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். பிறகு கிராமந்தோறும் கைத்தொழில்களை ஆரம்பிக்க வேண்டும்.

நாம் இனி வெளியிலிருந்து துணி வாங்கி உடுத்தவே மாட்டோம், எங்கள் ஊரில் தயாரித்தே உடுத்துவோ மென்ற உறுதி பூணவேண்டும். வெளியிலிருந்து வாங்கி வந்த துணியை உடுத்துகிறவர்கள் அம்மணமானவர்கள் என்பது என் எண்ணம். இப்பொழுது என் எதிரில் அமர்ந்திருப்பவர்களெல்லாம் அந்நியத் துணியே உடுத்தி யிருப்பதால் இது துணிகட்டாதவர்களின், பிறந்த மேனி யாய் உள்ளவர்களின் கூட்டமே. உங்களுக்கு வெளியி லிருந்து துணி கிடைக்காவிட்டால் உள்ள துணியையே கிழிந்து கந்தையான பின்பும் சிறிதுகாலம் உடுத்து வீர்கள். பிறகு அதுவும் போய்க் கோவணாண்டிகளா யிருந்து, பிறகு அதுவும் போய்விட அம்மணமாகிவிடு வீர்கள். ஏனெனில் உங்களுக்கு துணி தயாரிக்கும் கலையே தெரியாது.

இவையெல்லாம் அரசாங்கத்தின் சட்டத்தின்மூலம் நடைபெறா. சிலர் என்னிடம், ''பாபா எதற்காக இப் பூமிதான வேலை செய்யவேண்டும்? அரசாங்கம் தன்னிட முள்ள நிலத்தைப் பிரித்துக் கொடுக்கக் கூடாதா?'' என்று கேட்கிறார்கள். அரசாங்கம் நிலத்தைப் பகிர்ந்து கொடுக்குமானால் அப்பொழுது கிராம ராஜ்யம் இராது, தில்லிராஜ்யமே இருக்கும். முன்னர் இருந்த லண்டன் ஆட்சிக்குப் பதிலாக இப்பொழுது தில்லி ஆட்சி வந்திருக் கிறது. ஆனால் தில்லி ஆட்சிக்குப் பதிலாக கிராம ராஜ்யம் ஏற்பட வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். நம் பசி தீருவதற்கு நாமேதான் உணவருந்த வேண்டும், வேறொருவர் நமக்காக அருந்த முடியாது. இதேபோல நமது ராமராஜ்யத்திற்காக நாமேதான் பூமிதானம் செய்யவேண்டும், பிறர் செய்து பயனில்லை. மேலும் இன்று தில்லியிலுள்ளவர்கள் வெளி நாடுகளிலிருந்து எந்தப் பொருள்களை இங்கே தருவிக்கலாம், நாட்டின்

எந்தப் பொருள்களை வெளியே அனுப்பலாம் என்றெல் லாம் யோசிப்பதைப்போல ஒவ்வொரு கிராமத்திலுள்ளவர் களும் வெளியிலிருந்து எவைகளை கிராமத்திற்குத் தரு விக்கலாம், எவைகளை கிராமத்திலிருந்து வெளியே அனுப் பலாம் என்று யோசிப்பார்கள். இன்றோ அவரவர் விரும்பு வதை அவரவர் வெளியிலிருந்து வாங்கிக் கொள்ளுகிறார். ஆனால் இனிமேல் இது நடைபெறாது. கிராமவாசிகள் அனைவரும் ஒன்றுகூடி ஆலோசித்து முடிவு செய்வார்கள். கிராமத்தில் ஒருவருக்கு வெல்லம் தேவைப்பட்டால் கிராம வாசிகள் அதுகுறித்து ஆலோசித்து இவ்வாண்டு கிரா மத்தில் வெல்லம் தயாரிக்க முடியாதாகையால் இவ்வாண்டு மட்டும் வெளியே யிருந்து வெல்லம் வாங்கிக் கொள்ளுவ தென்று முடிவு செய்வார்கள். ஆனால் கிராமத்தவர் கிராமக் கடையிலேயே அதை வாங்குவார்களேயன்றி வெளியூர்ச் சந்தையில்போய் வாங்கமாட்டார்கள். இவ் வாறு கிராம மக்கள் வெளியிலிருந்துவரும் வெல்லத்தைக் கிராமக் கடையில் ஒரு வருஷத்திற்கு வாங்கிக்கொள்ளு வார்கள். பிறகு கிராமத்திலேயே கரும்பு பயிர் செய்து அடுத்த ஆண்டிற்கு வேண்டிய வெல்லம் தயாரித்துக் கொண்டுவிடுவார்கள். அதே வெல்லம் கிராமக்கடையில் விற்பனைக்குவர, தேவையானவர்கள் வாங்கிக் கொள் வார்கள்.

இவ்வாறு கிராமம் முழுவதும் ஒரே உள்ளத்துடன் சிந்திக்கும். கிராமத்தில் ஐந்நூறுபேரிருந்தால் ஆயிரம் கைகளும், ஆயிரம் கால்களும் ஐந்நூறு அறிவுகளும் இருக்கும். ஆனால் மனம், உள்ளம் ஒன்றேதானிருக்கும். கீதையின் பதினோராம் அத்தியாயத்தில் விசுவரூப தரி சனம் வருகிறது. விசுவரூபக் காட்சியில் ஆயிரக்கணக் கான கைகளும், ஆயிரமாயிரம் கால்களும், காதுகளும், கண்களும் இருக்கின்றன. ஆனால் உள்ளமும் ஆயிர

யிருப்பதாய்க் கூறப்படவில்லை. விசுவரூபத்திற்கு இருக்கும் உள்ளம் ஒன்றே. அதேபோல கிராமத்திற்கும் ஒரே உள்ளந்தான். மூளைகள் ஐந்நூறு இருக்கும். அவை விஷயங்களை ஆராய்ந்து முடிவுசெய்யும். நம் சர்வோதய அமைப்பு இதுவே.

சர்வோதயம் யார் செய்வார்கள் ?

இப்பொழுது இச் சர்வோதயப் பணியை நீங்கள் செய்வதா, உங்கள் ராஜ்யத்தின் தலைநகரக்காரர்கள் செய்வார்களா, தில்லிவாலாக்கள் செய்வார்களா என்று நீங்களே சொல்லுங்கள். நீங்கள் உங்கள் திட்டத்தை வகுத்துக் கொண்டீர்களானால் தலைநகரத்தவரும் தில்லிக்காரர்களும் உங்களுக்குச் சிறிது உதவுவார்கள். ஆனால் உங்கள் கிராமத்திற்கான திட்டத்தை நீங்களேதான் வகுத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் கிராமந்தோறும் சென்று பாபா கூறும் இவ்விஷயத்தை விளக்கினீர்களானால் அறிவாளிகளான கிராம மக்கள், விவசாயிகள் இதைப் புரிந்து கொள்வார்கள். பிறகு உங்களுக்குத் தானம் கிடைப்பது ஒரு ஏகரும், இரண்டு ஏகருமாக இராது. ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள மகாஜனங்கள் அத்தனை பேரும் உங்களிடம் வந்து, " நாங்கள் எங்கள் கிராமத்தில் நிலமில்லாதவர் பிரச்னையைத் தீர்த்துவிட்டோம். எங்கள் கிராமத்தில் நிலமே யில்லாதவர்களுக்கும் போதிய நிலமில்லாதவர்களுக்கும் தேவையான நிலம் அளித்துவிட்டோம் " என்று அறிவிப்பார்கள். பிறகு இதைக் காட்டும் எல்லோரும் கையெழுத்திட்ட தானபத்திரத்தை உங்கள் பூமிதானக் காரியாலயத்தில் கொணர்ந்து தாக்கல் செய்து விடுவார்கள். இப்பொழுது கிராமத்தின் நிலமனைத்தையும் கிராம உடைமையாக்கிவிடுங்கள். அப்பொழுது உங்கள் கிராமத்தில் நிலமில்லாதவர் எவருமே

இரார். நில உடைமையுள்ளவரும் எவருமே இருத்தல் கூடாது. நீங்கள் இது குறித்துச் சிந்தியுங்கள். ஒரே மூச்சில் இந்த ஏற்பாடு நிறைவேறிவிடாதென்று எனக்குத் தெரியும். ஆகையால் இப்பொழுது கதர், கிராமக் கைத் தொழில்கள் ஆகியவைகளைத் தொடங்குங்கள்.

ஐந்துலட்சம் கிராமங்களின் ராமராஜ்யம்

இவை அனைத்தையும் செய்வதற்குச் சிறிது கால மாகும்; ஆனால் அதிக காலமும் ஆகவேண்டியதில்லை. ஒரு கிராமத்திற்கு ஒரு வருஷ மாகுமென்றால் இந்தியா வின் ஐந்து லட்சம் கிராமங்களுக்கு எவ்வளவு காலமாகு மென்று விகிதசமக் கணக்குப் போட்டுப் பார்க்கத் தேவை யில்லை. உங்கள் கிராமத்தில் மாமரம் பழுக்கத் தொடங் கினால் இந்தியாவெங்கும், ஐந்துலட்சம் கிராமங்களிலும் மா அதேசமயத்தில் பழுக்கத் தொடங்கும். ஆகையால் உங்கள் கிராமத்தில் கிராம ராஜ்யம் உருவாவதற்குத் தேவையான அதே சமயத்தில் இந்தியாவெங்கும், ஐந்து லட்சம் கிராமங்களிலும் ஏககாலத்தில் கிராம ராஜ்யம் அமைந்துவிடும். இவ் விஷயத்தை நீங்கள் கிராமந் தோறும் சென்று விளக்குவீர்களாயின் ஒரு லட்சம், இரண்டுலட்சம் ஏகர் என்று இப்பொழுது நிலம் சேர்க் கிறீர்களே, இந்தப் பஞ்சப்பாட்டு அப்பொழுது இராது. அப்பொழுது நீங்கள் கோடிக்கணக்கில்தான் பேசுவீர்கள்.

மூன்று சூத்திரங்கள்

இன்று நான் உங்கள்முன் சூத்திரங்களின் உருவில் விஷயங்களைச் சுருக்கிச் சொல்லியிருக்கிறேன். முதல் விஷயம் **குவியல் சுயராஜ்யம்**. இரண்டாவது விஷயம் **பரந்த சுயராஜ்யம்**. மூன்றாவது விஷயமோ **அராஜ்யம்** அல்லது **ஆட்சியற்ற நிலை**. அதுவேதான் ராமராஜ்யமும்.

அதை ராமராஜ்யம் என்பதா, அராஜ்யம் அல்லது ஆட்சி யற்ற நிலை என்பதா என்பது அவரவர் இஷ்டத்தைப் பொறுத்த விஷயம். கடவுள் இல்லை என்றும் சொல்லலாம், கடவுள் பாற்கடலில் துயில்கிறார் என்றும் சொல்லலாம். ஆனால் கடவுள் வேர்க்க வியர்க்கப் பாடுபடுகிறார் என்று மட்டும் சொல்லுவதற்கில்லை. கடவுள் இல்லையென்றிருக்க வேண்டும் அல்லது அவர் அகர்த்தாவாய் உள்ளார் என்றிருக்க வேண்டும். கடவுள் கர்த்தா, அவர் அனைத்தின் மீதும் தம் ஆட்சியைச் செலுத்துகிறார் என்பது மட்டும் ஆகாது. இத்தத்துவ ஞானத்தை, இந்த பிரம்ம வித்தையை நாம் நம் நாட்டில் உருவாக்க வேண்டும்.

பரஸ்பரச் சார்பு

நீங்கள் அனைவரும் உற்சாகமாக, சகோதரர்களாகி வேலையில் முனைந்துவிட வேண்டுமென்பது என் விருப்பம். சிலர் வினோபாவின் திட்டம் ஒருவரை யொருவர் சார்ந்து, பரஸ்பர உதவி செய்துகொண்டு வாழச் செய்வதாயில்லையே, 'தன் கையே தனக்குதவி' என்றல்லவோ இருக்கச் செய்கிறது என்கிறார்கள். அவர்களும் வினோபாவின் திட்டம் பிறர் கை பார்த்து வாழச் செய்யவில்லை என்பதை ஒப்புக்கொள்ளும் வரையில் விசேஷம்தான். ஆனால் அவர்கள் ஒருவருக்கொருவர் உதவுவதாய், பரஸ்பரச் சார்புக்கு இடமளிப்பதாயிருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். பார்க்கப் போனால் நானும் பரஸ்பர உதவியையேதான் விரும்புகிறேன். இன்று நான் பால் அருந்தினேனே, அதை நானே பசுவைக் கறந்தா கொண்டுவந்தேன்? மக்கள் தான், நீங்கள்தான் எனக்காக எல்லாம் ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். இவ்வாறு என்னால் ஆகும் பணியை நான் செய்து கொண்டே போக, நீங்கள் என் தேவைகளைக் கவனித்து வேண்டிய ஏற்பாடு

களைச் செய்து வருகிறீர்கள். ஆனால் பரஸ்பர உதவியிலும் இரண்டு வகையுண்டு. ஒரு வகை, குருடனுக்கும் முடவனுக்குமுள்ள உறவு. குருடனால் பார்க்க முடிவதில்லை, ஆனால் நடக்க முடிகிறது. முடவனுக்கோ பார்வையிருக்கிறது, ஆனால் அவனால் நடக்க இயலுவதில்லை. ஆகையால் அவர்கள் இருவரும் பரஸ்பரம் உதவிக்கொண்டு கூட்டு முறையில் வாழ்கிறார்கள். முடவன் குருடன் தோள்மீது அமர்ந்து கொள்ளுகிறான். அவன் கண்ணால் பார்த்துச் சொல்ல குருடன் நடக்கிறான். இவ்வாறு நீங்கள் சமுதாயத்தில் சிலரைக் குருடராகவும், சிலரை முடவராகவும் ஆக்கி அவர்கள் இருவரும் பரஸ்பரம் உதவிக்கொண்டு வாழ வேண்டுமென்று விரும்புகிறீர்களா? நானும் பரஸ்பர உதவி வேண்டுமென்றுதான் விரும்புகிறேன். ஆனால் இருவருக்கும் கண்களும் இருக்க வேண்டும், கால்களும் சரியாயிருக்க வேண்டும்; இருவரும் கை கோர்த்துக்கொண்டு சேர்ந்து நடக்கவேண்டுமென்று விரும்புகிறேன். நான் விரும்புவது திறமையுள்ளவர்களின் பரஸ்பர உதவியாயிருக்க, இவர்கள் விரும்புவது சக்தியற்றவர்களின், அங்கவீனர்களின் பரஸ்பர உதவியாகும்.

எல்லா விஷயங்களுமே, காரியங்களுமே ஒரே கிராமத்தில் நடைபெறாது என்று நமக்குத் தெரியும். ஒரு கிராமம் பிறிதொரு கிராமத்துடனும் பல கிராமங்கள் நகரங்களுடனும் ஒத்துழைத்து உதவிக்கொண்டு வாழ வேண்டியதே. ஆனால் நகரங்களிலிருந்து கிராமங்களுக்கு அரிசி குத்தி வருவதையும் மாவு அரைத்து வருவதையும் சர்க்கரை தயாரித்து வருவதையும் நான் விரும்பவில்லை. இவையெல்லாம் கிராமத்திலேயே தயாராக வேண்டும் என்பதே என் விருப்பம். ஆனால் கிராமங்களில் மூக்குக் கண்ணாடி, உஷ்ணமானி (தர்மா மீட்டர்) ஒலி பெருக்கி

(லவுட் ஸ்பீக்கர்) போன்றவை தேவைப்படுமானால் அவை களை நகரத்திலிருந்து கொண்டுவரலாம். இன்றோ நகரத் தவர்கள் கிராமவாசிகளின் தொழில்களைச் செய்கிறார்கள். கிராமத்தில் கச்சாப்பொருள் விளைவதால் அதை அங் கேயே செய்பொருள்களாக்கிக் கொள்ளலாம். ஆனால் இன்றோ நகரங்களில் ஒருபுறம் யந்திரங்களின் மூலம் செய் பொருள்கள் தயாராகின்றன. மறுபக்கத்தில் வெளி நாடு களிலிருந்து பண்டங்கள் வருவதையும் தடுக்கவில்லை. கிராமத்தின் தொழில்கள் கிராமத்திலேயே நடைபெற வேண்டும்; வெளி நாடுகளிலிருந்து பண்டங்கள் வரு வதைத் தடுக்கும்பொருட்டு அவைகளை நகரங்களில் தயா ரிக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். கிராமத்தின் தொழில்கள் நசித்துப்போமானால் அது கிராமங்களுக்கு மட்டுமல்ல நகரங்களுக்கும் ஆபத்தாய் முடியும். அப் பொழுது கிராமத்தில் வேலையற்றுப்போகும் மக்கள் நகரங் கள்மீது படையெடுப்பார்கள். அங்கே ஏற்கெனவே வெளிநாட்டுச் சரக்குகளின் தாக்குதல் இருக்கையில், கிராமத்து வேலையற்ற மக்கள் வேறு படையெடுத்தால் 'மத்தளத்திற்கு இருபுறமும் இடி' என்பது போல நகர மக்கள் இருபுறமும் தாக்குண்டு அழிவார்கள். ஆகையால் எமது திட்டத்தில் கிராமவாசிகள் தம் தொழில்களை கிரா மங்களிலேயே செய்ய, நகரவாசிகள் வெளி நாடுகளி லிருந்து வரும் சரக்குகளைத் தாமே தயாரிப்பார்களாகை யால் இருவரிடையிலும் கூட்டுறவு நிலவும். இவ்வாறு ஒவ்வொரு கிராமமும் பூரண நிலை எய்தியிருக்குமாகை யால் பூரண நிலையிலுள்ள அவை ஒன்றுக்கொன்று உதவிக்கொண்டு வாழும்.

கோடிபாம் (ஸ்ரீகாகுளம்),
ஆந்திரம். 9-8-'55

II

இந்தியாவில் எத்தனையோ ஆண்டுகளாக, முப்பத்தாறு ஆண்டுகளாக கதர் வேலை நடந்து வருகிறது. எனக்கு அது தோன்றியது முதல் நாளது வரையுள்ள அதன் முழு வரலாறு தெரியும். இந்தக் கதர் வேலையில்—நூற்பிலும் நெசவிலும் இதுபற்றிய மற்ற வேலைகளிலும்—என் வாழ்நாளில் பல வருஷங்கள் கழிந்திருக்கின்றன. இந்த வேலைகளை நானும் செய்திருக்கிறேன், என் (சீடப்) பிள்ளைகளும் செய்திருக்கிறார்கள், தோழர்களும் செய்திருக்கிறார்கள். கிராமங்களில் உள்ள அத்தனை பேரும் கதரையே உபயோகிக்கச் செய்ய, புறத்தேயிருந்து வேறு துணியே கிராமத்திற்குள் வராமற் செய்ய நாங்கள் முயன்றிருக்கிறோம். இம்முயற்சி, இதற்கான சோதனை ஒவ்வொரு மாகாணத்திலும் எத்தனையோ கிராமங்களில் நடந்திருக்கிறது. இது ஓரளவுக்கு நடந்து பிறகு நின்று போயிற்று. ஏனெனில், அதற்கான அடிப்படை, அஸ்திவாரம் அமைக்கப்படவில்லை, ஒவ்வொரு வீட்டிலும் உணவு தயாரிப்பதைப் போல உடை தயாரிப்பதற்கும் மக்களனைவரும் சம்மதிக்கும்பொழுதுதான் இது நிறைவேறும்.

வீடுதோறும் கதர்

இந்தக் கிராமத்தில் சில குடும்பங்கள் கதர் உடுத்துவதில்லை, மற்றவையெல்லாம் உடுத்துகின்றன என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். நான் இனி அமைக்கவிருக்கும் சமுதாயத்தில் ஒவ்வொரு கிராமமும் ஒரு முழுக் குடும்பம் ஆகும். இதுவரை நம்மால் இதைச் செய்ய இயலவில்லை. ஒவ்வொரு வேலைக்கும் அதற்குரிய காலமுண்டு, அது வரவேண்டும். கடவுளின் அருள் நம் வேலைக்கு இருக்கவேண்டும். ஆனால் நம் முயற்சி என்னவோ ஒருபொழுதும் தளர்ந்ததில்லை; இன்றுவரை

முயற்சி இடையருது நடந்துதான் வந்தது. ஆனால் மூன்று நான்கு வருஷங்களாக கிராமந்தோறும் விவசாயமும், வீடுதோறும் சமையலும் நடப்பதைப்போல கிராமந்தோறும், வீடுதோறும் கதர் வேலையை எவ்வாறு நடைபெறச் செய்வதென்று நான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். கதர் வஸ்திராலயங்களில் விற்பனைக்குள்ள கதரைப்பற்றியல்ல நான் இப்பொழுது சொல்வது. விவசாயத்திற்குப் போக எஞ்சிய நேரத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் கிராமத்தின் ஒவ்வொரு வீட்டிலும் தயாரிக்க வேண்டிய கதரையே நான் குறிப்பிடுகிறேன். இது கிராமந்தோறும் சுயராஜ்யம் நடைபெறும்பொழுதுதான் சாத்தியம்.

அரசாங்கம் நூல், துணி ஆலைகளைக் கட்டுப்படுத்தி மக்களை ஊக்குமானால் இது நடைபெறக்கூடும். ஆனால் முன்பெல்லாம் அரசாங்கத்திற்கு இதற்கு வேண்டிய துணிவில்லை. மக்கள் இதற்குச் சம்மதிக்காவிட்டால் நாம் இதை எப்படிச் செய்யமுடியுமென்று அது சொல்லி வந்தது. இந்தக் காரியத்தில் நம்பிக்கையில்லாமல் அரசாங்கத்தை நிர்வகிப்பவர்கள் இவ்வாறெல்லாம் வாதம் செய்தார்கள். ஆனால் இத்தனை ஆண்டுகளாக சுயராஜ்யம் நடத்தி அனுபவம் ஏற்பட்டபின் வேலையில்லாக் கொடுமை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போவதைக் காணவே, கதருக்குத்தான் ஊக்கம் அளித்துப் பார்ப்போமேயென்று அரசாங்கம் எண்ணுகிறது. அரசாங்கம் இவ்வகையில் எண்ணவும் நடவடிக்கை எடுக்கவும் தொடங்கியிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமே. இது மிகவும் பெரிய விஷயம். அவரவர் வீட்டில், சோறு சமைத்துக் கொள்வதைப்போல அவரவர் தமக்கு வேண்டிய கதரையும், துணியையும் தயாரித்துக் கொள்ள வேண்டும்; இதையும் அவர்கள் தம் அன்றாட வேலை

யாகக் கொள்ள வேண்டும். இது அரசாங்கத்தின் முயற்சியினுல் மட்டும் நடக்கக் கூடியதல்ல. நாட்டின் ஒவ்வொரு குழந்தையையும் நல்ல போஷாக்களித்து வளர்க்கவேண்டுமென்று அரசாங்கம் விரும்பியபோதிலும் தாய் தந்தையர் இல்லேயேல் அரசாங்கத்திஞல் இதைச் செய்ய இயலாது. இதேபோல வாழ்க்கையில் ஓர் அம்சத் தைப் புகுத்தல், உறுதி ஒன்றைச் செய்து கொள்ளுதல் என்பது மக்கள் செய்யவேண்டிய காரியம். பிறகு அது நிறைவேறுவதற்கு அரசாங்கம் சிறிது உதவக்கூடும். அவ்வாறு உதவிஞல் நல்லது தான்; உதவுவதையும் பார்க்கிருேம். ஆஞல் அரசாங்கம் உதவவில்லே, எதிர்க் கிறது என்றே வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுதும் மக்களாகச் செய்யும் முடிவு மக்களின் சக்தியிஞல், ஜன சக்தியிஞல் நிறைவேறவே செய்யும்.

நான் முன்பிருந்து இன்றுவரை ஜனசக்தி அல்லது மக்கள் சக்தியைத் தவிர அரசாங்கத்தின் சக்தியென்ற தனிச் சக்தியொன்று கிடையாதென்றே எண்ணிவந் திருக்கிறேன். மக்கள் தான் எஜமானர்; அரசாங்கம் அவர்களின் ஊழியனே. எஜமானரைவிட வேலேக்கார னுக்கு அதிக சக்தி எவ்வாறு ஏற்படும்? அரசாங்கத் திற்கு எவ்வளவோ சக்தியுண்டு. புரட்சிகரமான மாறு தல்கஃள அரசாங்கத்திஞல் தான் செய்யமுடியுமென்று எண்ணுபவர்கள் எஜமானரைவிட வேலேக்காரனுக்கு அதிக மதிப்பளிக்கிருர்கள். இவ்வாறு செய்தல் தவறு, உண்மை நிலேயும் இவ்வாறில்லே. உங்களுக்கு எவ் வளவோ சக்தியிருக்கிறது. அது உங்கள் ஆன்மாவினுள் பொதிந்திருக்கிறது.

மக்கள் தொகைப் பெருக்கமென்ற பூதம்

இந்தியாவில் ஜனத்தொகை அதிகம், போதிய நில மில்லை, உள்ள நிலம் பெருக்குவதற்குமில்லை ; ஆகையால் நிலத்திலிருந்து கிடைக்கும் விளைவைக் கொண்டு கிராம மக்களால் வாழ இயலாது ; வேறு கைத்தொழில்களில்லை யானால் அவர்களுக்கு உதவக்கூடியது வேறெதுவுமில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்த வேலைக்கு யந்திரங்களிடமிருந்து உதவி எதுவும் கிடைப் பதற்கில்லை. ஆனால் விஞ்ஞானம் இதற்கு உதவக்கூடும். விஞ்ஞானம் வேறு, யந்திரம் வேறு. யந்திரயுகத்தில் விவசாயத் தொழிலை முன்னிலும் விரைவாகச் செய்ய லாம். ஆனால் இவ்வாறு யந்திரம் விவசாயத்தில் புகு மானால் வேலையில்லாக் கொடுமை பெருகுமே தவிர குறை யாது. ஆகையால் யந்திரத்தினால் வேலையில்லாமை தீராது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

கடவுள் ஒவ்வொருவருக்கும் ஒரு வாய் கொடுத்திருந் தும் கைகள் இரண்டு கொடுத்திருக்கிறார். ஆயினும் இந்த வேலையில்லாப் பிரச்னை என்னவோ இருந்து கொண்டிருக்கிறது. அவர் இரண்டு வாய்களும் ஒரு கையும் கொடுத்திருந்தால் நம் கதி என்னவாகியிருக்கும் என்பது யோசிக்க வேண்டிய விஷயம். நாம் நம் வீட்டில் ஐந்து வாய்கள், அதாவது சாப்பிடுவதற்கு ஐந்து பேர் இருக்கிறார்கள் என்று சொல்லுகிறோம். ஆனால் வாய்கள் ஐந்திருந்தால் கைகளும் பத்து இருக்கின்றன அல்லவா? ஆனால் இதைப் பெரிய பெரிய மனிதர்களே புரிந்துகொள் ளாது பேசுகிறார்கள் ; "இந்தியாவின் ஜனத்தொகை பெருகிக் கொண்டே போகிறது, அது குறையாவிட்டால் இந்தியா முன்னேறுவதற்கில்லை" என்கிறார்கள். இம் மாதிரியான கருத்துக்களை மேனாட்டவர் இங்கே வெகு

வாகப் பரப்பியிருக்கிறார்கள். இங்கிலாந்தின் ஜனத் தொகை வெகு அதிகம். அத்துடன் ஒப்பிடும்பொழுது இந்தியாவின் ஜனத்தொகை குறைவே. ஆயினும் இந் தியா ஏழை நாடாகையால் இங்கே ஜனத்தொகை பெரு குதல் ஆபத்தாகுமென்று அவர்கள் நினைக்கிறார்கள். இவ்வாறு 'இந்தியாவின் ஜனத்தொகை'யென்ற ஒரு பூதமே எழுப்பப்பட்டிருக்கிறது. மக்கள் அது குறித்துக் கவலைப்படுகிறார்கள்; அதைப் பற்றியே பேசுகிறார்கள், வாதிக்கிறார்கள்.

சமீபத்தில் நடந்தது. எங்களுடன் ஒரு அமெரிக்க மாது யாத்திரையில் வந்துகொண்டிருந்தார். ஐந்தாறு நாட்களுக்கு முன்புதான் அவர் போனார். அவர் ஏதோ ஒரு தேசத்துக் கல்லூரியில் பேராசிரியர் வேலை பார்ப் பவர். இப்பொழுது அமெரிக்காவுக்குத் திரும்பிப் போய்க் கொண்டிருந்தார். இந்தக் காலத்தில் இம் மாதிரி பலர் வருகிறார்கள். இந்தியாவுக்கு வருவதும் பூமிதான வேலை நடப்பதைப் பார்ப்பதும் தற்சமயம் ஒரு 'பாஷ'னாகி விட்டது. அவரும் இந்தியாவின் பெரிய கொடிய பிரச்னை ஜாதி வேற்றுமைகள், இந்தியா வின் கொடிய பிரச்னை ஏழைமை, இந்தியாவின் கொடிய பிரச்னை பெருத்த ஜனத்தொகை என்றெல்லாம் புத்தகங் களில் படித்தும் பிறர் சொல்லக் கேட்டுமிருந்தார். வெளி நாட்டிலிருந்து இத்தகைய பெண்கள் இங்கே வரும் பொழுது நம்மூர்க் குழந்தைகள் அவர்களைச் சூழநின்று கொண்டு வேடிக்கை பார்ப்பது இயற்கைதானே? அவர் என்னிடம், நான் உங்களுடன் யாத்திரை செய்கையில் இங்கே குழந்தைகள் ஏராளமாயிருப்பதைப் பார்க்கிறேன். இந்தியாவின் ஜனத்தொகை இவ்வாறு வளர்ந்துகொண்டே போனால் என்ன கதி ஆவது?'' என்று கேட்டார். இந்தத் தவறான கருத்து அவர் மனத்தில் இப்படியேயிருந்து

விடுமானுல் அவர் ஊருக்குப் போய் இந்தியாவைப் பற்றி என்னென்ன சொல்லுவாரோ என்று நான் எண்ணினேன்.

நான் செல்லும் கிராமம் ஒவ்வொன்றையும் பற்றிய முழு விபரங்களும் என்னிடம் எழுதப்பட்டு இருப்பது வழக்கம். ஆகவே நான் ஒரு பத்து கிராமங்கள் பற்றிய விபரங்களை அவரிடம் எடுத்துப் போட்டேன். அவற்றிலிருந்து ஒவ்வொரு வீட்டிலும் சராசரி ஒரு குழந்தை இருத்தலே அரிதென்பது வெளியாயிற்று. இப்பொழுது இவ்வளவு குறைவாகக் குழந்தைகளிருந்தால் காரியம் எப்படி நடைபெறும் என்பது எனக்குப் பிரச்னையாயிருக்கிறது. இந்த உண்மை ஊன்றி நிலைமையைப் புரிந்துகொள்ளும்பொழுது தெரியவருகிறது. பெரும்பாலும் ஒரு வீட்டில் சராசரி ஒரு ஆணும் ஒன்றேகால் பெண்ணும் ஒன்று அல்லது ஒன்றேகால் குழந்தையுமே இருப்பதைக் காண்கிருேம். அதாவது, மொத்தத்தில் ஒரு வீட்டிலிருப்பவர்கள் மூன்றரைப் பேர். பெரும்பாலும் இந்தியக் குடும்பங்களின் சராசரி ஜனத்தொகை ஐந்து பேர் என்ருலும் இந்தப் பகுதியில் குடும்பத்திற்கு மூன்றரைப் பேரே இருந்தார்கள். ஆகையால் குழந்தைகளின் பிரச்னை ஒரு பிரச்னையே அல்ல. வீட்டிற்கு ஐந்துபேர் இருக்கும் இடங்களிலும் இப்பிரச்னை எழவில்லை. ஒவ்வொரு ஆளுக்கும் ஒரு வாயும் இரண்டு கைகளும் இருக்கும் வரை ஜனத்தொகைப் பிரச்னை எழுவதற்கேயில்லை.

நாட்டின் தலைவர்கள் ஜனத்தொகை பெருகிக் கொண்டிருக்கிறதே, நிலைமை மோசமாகி வருகிறதே என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள். சேனுதிபதிக்குத் தன் படையில் ஆட்கள் அதிகமாய் இருப்பதைப் பார்த்து மகிழ்ச்சியே யுண்டாகும், கவலை ஏற்படாது. 'என் படையில் இத்தனை ஆட்கள் இருக்கிருர்களே' யென்று

அவன் கவலைப்படமாட்டான். ஆனால் இந்தத் துக்குறி களோ நாட்டின் ஜனத்தொகை இப்படிப் பெருகிக் கொண்டிருக்கிறதேயென்று கண்ணீர் வடிக்கிறார்கள். நான் எவ்வளவோ தடவை சொல்லியிருக்கிறேன், இன்று அதையே மீண்டும் சொல்லுகிறேன்; பூமிதேவிக்குப் பாவிகளின் தொகை பெருகினால் பாரமாயிருக்குமேயன்றி தர்மசீலர்களான பிள்ளைகளின் பாரம் அவளுக்கு உறைக்கவே செய்யாது. குழந்தைகள் பாவத்தினாலும் பிறக்கிறார்கள், புண்ணியத்தினாலும் பிறக்கிறார்கள். அதே வகையில் பாவத்தின் மூலமாயும் பிள்ளைகள் பிறப்பதைத் தடுக்கலாம், நல்ல முறையிலும் தடுக்கலாம். ஆனால் பாவத்தின் மூலம் செய்யப்படும் காரியத்தைப் பூமியினால் தாள முடியாதுதான்.

பூமியில் ஏற்படும் விளைவுகளுக்குத் தேவையான சத்து அதிலிருக்கிறது. அது அதற்குப் பாரமாயிராது. ஆனால் ஒரு நிபந்தனை. அதிலிருந்து ஏற்படும் விளைவுக்கு ஈடான சத்து அதற்குத் திரும்பக் கிடைத்துவிட வேண்டும். மல ஜலத்தைச் சரியாகப் பயன் படுத்த வேண்டும். உரமாக அது திரும்பவும் பூமியில் சேர்க்கப்படவேண்டும். பிராணிகளின் எலும்புகள் முதலியவை விவசாயத்திற்குப் போதிய அளவு கிடைக்க வேண்டும். காடுகளின் இலை தழைகளும், சருகுகளும் காற்றில் பறந்துபோய்ப் பாழாகின்றன; அவையும் பயன்படுத்தப்படவேண்டும். இவ்வாறு எல்லாப் பொருள்களும் பூமிக்குத் திரும்பக் கிடைத்துக் கொண்டிருக்குமானால், நாம் எல்லோரும் நம் கைகளைக் கொண்டு பாடுபட்டு வருவோமானால், பூமிதேவிக்கு மனிதர் தொகைப் பெருக்கம் பாரமாயிராது. நீங்கள் உங்களுக்குத் தேவையான பொருள்களையெல்லாம் நீங்களே தயாரித்துக் கொள்ளுவதென்ற

விரதம் பூணுதவரை எந்த அரசாங்கத்திலும் உங்களுக்
காக எந்தத் திட்டமும் வகுக்கவியலாது.

கிராம மக்கள் 'சீதா ராம்' 'சீதா ராம்' என்று சொல்லும்பொழுதுதான் இன்பம் அடைவார்கள். சீதை தான் விவசாயம், ராமன்தான் கைத்தொழில்கள். விவசாயத்தை எல்லோரும் ஒருமித்திருந்து செய்யவேண்டும். நிலம் எல்லோருக்கும் சொந்தம். குழந்தைகள் தாய்க்கு ஊழியர்களாக இருக்கமுடியுமேயன்றி எஜமானர்களாக முடியாது. நாம் பூமிதேவியின் குழந்தைகளேயல்லாமல் எஜமானர்களல்ல. சிலர், "தனி மனிதன் எஜமானன் ஆவதற்கில்லை. ஆனால் அனைவரும் சேர்ந்து எஜமானராகலாம்" என்கிறார்கள். ஆனால் தனிமகன் தாய்க்கு எஜமானன் ஆகமுடியாதென்றால் பல பிள்ளைகள் சேர்ந்தும் ஆகமுடியாதென்று நான் சொல்லுகிறேன். ஆகையினால் நிலத்திற்கு உரிமையாளர், உடைமையாளர் கடவுள் தான். பணி புரிதல் நம் உரிமை மட்டுமல்ல, நம் அனைவரின் கடமையுமாகும்.

இவர்கள் நமக்கு, "நிலத்தைத் துண்டாடக்கூடாது; எத்தனை பேருக்குப் போதிய நிலம் கொடுக்க முடியுமோ, கொடுத்துவிட்டு மற்றவர்களுக்கு வேறு கைத்தொழில் களைக் காட்ட வேண்டும்" என்று சொல்லுகிறார்கள். கிராமக் கைத்தொழில்களே ராமன், விவசாயமே சீதை என்று நான் இப்பொழுதுதான் சொன்னேன். இரண்டும் சேர்ந்திருக்கும்பொழுதே நன்மையுண்டு. கிராமக் கைத் தொழில்கள் மிகவும் அவசியமானவை. அவைகளின்றி விவசாய வேலை பூர்த்தி பெறாது. கிராம வாழ்க்கை அவற்றின் உதவியின்றி தன் கால்களின்மீதே நிற்றல் சாத்திய மில்லை, கிராம ராஜ்யத்தையும் அமைக்கவியலாது. ராமனை அயோத்தியிலும் சீதையை மதுரையிலுமாக இருக்கச் செய்யும் பாகுபாடு நம்மால் ஆகாது. இருவரும்

சேர்ந்தேதானிருப்பார்கள். கிராமத்திலுள்ள சிலருக்குத் தண்ணீரும், சிலருக்குச் சோறும், சிலருக்குப் பாலும் என்ற—அதாவது பால் அருந்துவோருக்குச் சோறு கிடைக்காமலும், சோறு உண்போருக்குத் தண்ணீர் கிடைக்காமலும், இவையிரண்டும் பெறுவோருக்குப் பால் கிடைக்காமலும் இருக்கும் ஏற்பாடு சரியல்ல. ஒவ்வொருவருக்கும் தாகத்திற்கு நீரும், பசி ஆறச் சோறும், புஷ்டிக்குப் பாலும் கிடைக்க வேண்டும். இவை மூன்றும் அனைவருக்குமே கிடைக்க வேண்டும். நிலத்தை உழுது பயிரிட்டு பூமிதேவிக்குப் பணி செய்யும் சந்தர்ப்பம், இக்கடமையை நிறைவேற்றும் வாய்ப்பு ஒவ்வொருவருக்கும்—அவர்களுக்கு கிடைப்பது கால் ஏக்கர் நிலமேயாயினும்—இருக்கவேண்டும். எவருக்கு எவ்வளவு நிலம் கிடைத்தது என்பது கேள்வியே அல்ல. ஒவ்வொருவருக்கும் நிலம் கிடைக்க வேண்டும்; அவர் அதில் உழைத்துப் பாடுபட வேண்டும்.

பூமியில் பாடுபடும் உரிமை

இறுதி இலட்சியம் நாட்டின் பிரதம மந்திரியும் ஒவ்வொரு நாளும் மூன்று அல்லது நான்கு மணி நேரம் வயலில் வேலை செய்து, எஞ்சிய நேரத்தையே அவர்தாம் ஏற்றுள்ள தனி வேலையில் செலவிட வேண்டும் என்பது. இதனால் நாட்டின் தூய்மை பெருகும், மக்களின் ஆரோக்கியம் வளரும், உயர்வு தாழ்வு என்ற எண்ணம் மறைந்து போகும். நிலத்தில் வேலை செய்யப் பல ஊழியர்கள் கிடைப்பார்கள். நிலத்திற்கு அனைவரின் அறிவும் பயன்படும். எல்லோருக்கும் ஒரேவகையான தர்மம், பண்பாடு ஆகியவை இருப்பதன் பயன் கிட்டும். சிலரிடம் விவசாயம் செய்யுமாறும், இன்னும் சிலரை வேறு வேலைகள் பார்க்குமாறும் சொல்லுவது அநியாயமே. நான் பயிற்சி

யின் பொருட்டு எட்டு மணி நேரம் நெசவும், எட்டு மணி நேரம் நூற்பும், எட்டு மணி நேரம் வேறு வேலைகளும் செய்து பார்த்திருக்கிறேன். ஆனால் இன்று ஒருவர் என்னை எட்டு மணி நேரம் அமர்ந்து நெசவு செய்யுமாறு நிர்ப்பந்தம் செய்தால் நான் முடியாதென்றே சொல்லு வேன். நான் "காற்றோட்டமில்லாத ஓர் அறையில் கைக்கு வேலை யெதுவும் இல்லாமல் இடுப்புவலி எடுக்கக் கூடிய நிலையில் தொடர்ந்து எட்டு மணி நேரம் இருக்கச் சம்மதியேன்'; என்று சொல்லிவிடுவேன். "நான்கு மணியாவது ஆகாயத்தின் கீழே இருந்து நல்ல காற்றை யும் நல்ல வெயிலையும் அனுபவித்துக்கொண்டு நிலத்தில் பாடுபட எனக்கு வசதி வேண்டும். இதற்கு எனக்கு உரிமையுண்டு" என்பேன்.

இதனால் பூமியின் விளைவு குறைந்து போகுமென்று நான் எண்ணவில்லை. ஒருக்கால் குறைந்தாலும் சிலர் முழுக்க முழுக்க விவசாயமே செய்வதையும் சிலருக்கு இதற்கு வாய்ப்பே இல்லாதிருப்பதையும் நான் ஒப்பேன். பேச்சுச் சுதந்திரத்தையும் கருத்துச் சுதந்திரத்தையும் போல உணவுக்கும் எல்லோருக்கும் உரிமையுண்டு. ஏன், எல்லோருக்கும் இலவசமாய் உப்புக்கும் உரிமையுண்டு என்றுகூட எண்ணுகிறார்கள். இதேவகையில் மனிதர் அனைவருக்கும் வயலில் வேலை செய்வதால் ஏற்படும் தேகப் பயிற்சிக்கு உரிமையுண்டு. எல்லோருக்கும் நிலத்தில் பாடுபடச் சந்தர்ப்பம் ஏற்பட வேண்டும். இதில் பொருளாதார திட்டம் எதுவும் குறுக்கிடுவதற்கில்லை. அத் தகைய திட்டமெதையும் நான் ஏறிட்டும் பார்க்கமாட் டேன். இது இயற்கையாக ஆண்டவனைப் பார்த்து அளித்துள்ள உரிமை. ஒருவர், சிலர் இருபத்து நான்கு மணி நேரம் தூங்கிக்கொண்டும், இன்னும் சிலர் இருபத்து நான்கு மணியும் வேறு வேலைகள் செய்துகொண்டும்

இருந்தால் பொருளாதார லாபம் ஏற்படும் என்று அதற்கென ஒரு திட்டம் கொணர்ந்தால் அதை எவரேனும் ஏற்பார்களா ?

" நாங்கள் இரவில் விழித்திருந்து ரயில் ஸ்டேஷனில் வேலை பார்க்கமாட்டோம். பகல் நேரத்தில் மட்டுமே ரயில் வண்டிகள் ஓடவேண்டும் " என்றுகூட மக்கள் கூற வேண்டுமென நான் கருதுகிறேன். ஒருவர் நோயுறுகிறார், ஓரிடத்தில் தீப்பற்றிக் கொள்ளுகிறது, வெள்ளம் வந்துவிடுகிறது என்றால் நாம் இரவில் விழித்து வேலை செய்ய வேண்டியதுதான். ஆனால் கூலிக்காக இரவில் விழித்து வேலை செய்ய மனித சமூகம் ஒருமுகமாய் மறுத்துவிட வேண்டும். ரயில் வண்டிகள் பகலில் மட்டுமே ஓடுவதென்று ஆகிவிட்டால் உங்கள் ரயில்களின் நிலை என்னவாகும் ? அந்திப்பொழுதானதும் ரயில் வண்டிகள் சேருமிடத்தில் அங்கங்கே நின்றுவிடும். நான் கூறும் இவ் விஷயம் விநோதமாய்த் தோன்றுகிறதல்லவா? ஆனால் ஆன்மநிலையில் நின்று சிந்திப்பவனது போக்கு விசித்திரமாய்த்தானிருக்கும். ஆகையால் என் பொருளாதார சாஸ்திரமும் தனி முறையில் அமைந்தது தான்.

நமது கிராம நிர்மாண முறையில் ஒவ்வொரு மனிதனுக்கும் நிலத்தில் பாடுபடவும் எஞ்சிய நேரத்தில் பிற வேலைகளைக் கவனிக்கவும் உரிமை ஏற்படும். என்னிடம் எவரேனும், " நீங்கள் பேராசிரியர் வேலையை ஏற்று தினமும் ஆறுமணி வேலை செய்வீர்களானால் ஐயாயிரம் ரூபாய் சம்பளம் கிடைக்கும். ஆனால் நீங்கள் வயல்காடுகளின் பக்கமே எட்டிப் பார்க்கக் கூடாது " என்று சொன்னால், " எனக்கு அந்த உத்தியோகம் வேண்டாம். நான் நான்கு மணி வயலில் வேலை செய்கிறேன் ; எஞ்சிய நேரத்தில் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கி

றேன். ஆனால் இந்தப் பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு எனக்குக் கூலி வேண்டாம். வயலில் வேலை செய்வதால் கிடைப்பதே எனக்குப் போதும்'' என்று சொல்லி விடுவேன். எனக்கு நீங்கள் பை பையாகக் கொடுக்கும் பணமும் வேண்டாம், பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு நான் கூலி பெறவும் மாட்டேன். எல்லோரும் வயலில் வேலை செய்வார்களானால் எல்லோருமே நல்ல பேராசிரியர் களும், நல்ல வியாபாரிகளும், நல்ல வக்கீல்களும் ஆவார்க ளென்பது என் நம்பிக்கை. இச் சர்வோதய நோக்கின், சர்வோதயக் கருத்தின் விளைவாக கிராமங்களெல்லாம் சுயதேவைப் பூர்த்தி செய்வதோடு பூர்ண வளர்ச்சியும், மலர்ச்சியும் பெறும். அதாவது ஒவ்வொரு கிராமத்திலும் மனிதத்தன்மை செழித்தோங்குவதோடு கிராமங்கள் பரஸ்பரம் இணைந்து, சிறந்து வாழும். நாம் பூரணநிலை எய்தியவர்களின் கூட்டுறவை விரும்புகிறோம்; அரை குறைகளின், கையாலாகாதவர்களின் கூட்டுறவை விரும்ப வில்லை. ஆகையால் கிராமக் கைத்தொழில்களும் விவசா யமும் சேரும்பொழுதே பூரண வளர்ச்சிக்கு, மலர்ச்சிக்குச் சந்தர்ப்பம் ஏற்படும்.

அனைவருக்கும் கல்வி

மூன்றாவதாக, நான் சொல்ல விரும்பும் விஷயம் கல்வியைப் பற்றியது. பிராம்மணன் மட்டும் படிப்பது மற்றவர்களெல்லாம் அவனது அறிவை நம்பி வாழ்வது என்பது கூடாது. அறிவு என்ற உணவு எல்லோருக்குமே கிடைக்கவேண்டும். வயலில் வேலை செய்வதற்கும், அறிவை வளர்த்து உள்ளத்தை விரிவாக்கிக் கொள்ளுவ தற்கும் எல்லோருக்கும் வாய்ப்பிருக்க வேண்டும். இவை மூன்றும் ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு குடும்பத்திலும் அனைவருக்கும் கிடைக்கவேண்டும். இவையெல்லாம்

இருக்கும்பொழுது கிராமங்களில் இன்பம் பொங்கிப் பெருகும். ஆனால் நீங்கள் அதை நன்கு புரிந்துகொண்டு ஒருமிக்க உறுதி பூணும்பொழுதுதான் இவையெல்லாம் சாத்தியம். இதன்பொருட்டு நீங்கள் அனைவரும் ஒரே குடும்பம் ஆகிவிடுங்கள்; கிராமத்திலுள்ள நிலமனைத்தையும் பொதுவாக்கி விடுங்கள். கிராமத்திலுள்ள குழந்தைகள் அத்தனைபேரும் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்; தனித் தனி வீட்டைச் சேர்ந்தவர்களல்ல. எல்லோருக்கும் பொதுவாக நல்ல கல்வி அளிப்பதற்குத் திட்டம் வகுப்பது பற்றிச் சிந்தியுங்கள். நமக்குத் தேவையான பண்டங்களை நாமே நம் கைகளாலேயே செய்து கொள்ளுவோம், வெளியிலிருந்து வாங்கமாட்டோம்; கிராமத்திலுள்ள கச்சாப்பொருள்களை நாமே செய்பொருள்களாக்குவோம்.

உடை சுயதேவைப் பூர்த்திக்கு உறுதி

தேவையான பொருள்கள் அனைத்திலும் மிகவும் முக்கியமானது ஆடையாகும். உணவு முதல் தேவை, உடை இரண்டாவதென்று சாதாரணமாய்ச் சொல்லப்படுகிறது. ஆனால் மனித நாகரிகத்தின் போக்கில் உடை முதல் இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டுவிட, உணவு இரண்டாம் படிக்குப் போய்விட்டது. நான் நான்கு நாள் பட்டினி கிடப்பேன்; ஆனால் உங்கள் எதிரில் அரை மணி நேரம்கூட ஆடையின்றி நிற்கவோ, இருக்கவோ என்னால் ஆகாது. ஆகையால் மனித வாழ்க்கையில் ஆடை முக்கியத்துவம் பெற்றிருப்பதை நீங்கள் அறிவீர்கள். குளிருக்குத் தப்பவோ வெயிலிலிருந்து உடலைக் காக்கவோ துணி தேவையென்று இருக்குமானால் அதற்கு இரண்டாவது இடமும் உணவுக்கு முதல் இடமும் ஏற்பட்டிருக்கும். ஆனால் பிணத்திற்குக்கூட துணி தேவையாயிருக்க, உயிர் போனபிறகு எவரும் சோறுபோடென்று

சொல்லுவதில்லை. எனவே உலக வழக்கில் நாம் ஆடைக்கு முதலிடம் அளித்துவிட்டோம். இந்தத் துணியின் விஷயத்திலும் பிறர் கை பார்க்க வேண்டிய நிலையிலுள்ள கிராமம் கனவிலும் இன்பம் எய்தவியலாது.

ஆகையால் உலகெங்கும் துணி ஆலமயமானாலும், கிராமத்திற்கு வெளியிலிருந்து மலிவாகத் துணிவந்தாலும், அந்தத் துணி உங்களுக்கு இனாமாகவே கிடைத்தாலும், வெளியிலிருந்து வரும் துணியோடு இரண்டணா தக்ஷிணை சேர்த்து ஒருவர் உங்களுக்குக் கொடுப்பதாயிருந்தாலும், "எங்கள் கிராமத்தில் எங்கள் கையால் நூற்று நெய்த ஆடையையே நாங்கள் உடுப்போம்" என்று நீங்கள் உறுதி செய்துகொள்ள வேண்டும். 'தன் கையே தனக்குதவி' என்று கொண்டு வாழும்பொழுது தான் நம் வாழ்க்கை சிறக்கும். ஆகையால் நாம் பிறர் கைபார்த்து வாழோமென்று நீங்கள் கடவுளெதிரில் சத்தியம் செய்யுங்கள். அவ்வாறு சத்தியம் செய்யுமாறு நான் உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

கிராமந்தோறும், வீடுதோறும் சுயராஜ்யம்

நாற்பது, ஐம்பது கிராமங்களில் சர்வோதயப் பணி ஒருசேர நடக்குமிடங்களிலும் நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். கிராமந்தோறும் இது நடைபெற வேண்டும். அங்கே லட்சுமிதேவியின் கிருபை பெருகட்டும். கிராமம் இன்பமாய் வாழட்டும். ஆனால் அதோடு அவை சுதந்திரமாயும் இருந்துவரவேண்டும். இன்று நம் நாடு சுதந்திரம் அடைந்துவிட்டதென்று சொல்லப்படுகிறது. நாட்டை அமுக்கிக்கொண்டிருந்த ஒரு பெரிய சுமை அகன்றுவிட்டது. இது ஒரு பெரிய விஷயம் என்பதில் ஐயமில்லை. ஆனால் இதனாலேயே நாம் சுதந்திரராகிவிட்டோம் என்பதற்கில்லை. சுதந்திரம் என்பது

ஆன்மாவைப்பற்றியது, மனம் பற்றியது. இன்றும் நாம் எடுத்ததற்கெல்லாம் அரசாங்கத்தின் கையைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அடிமைகளாயிருந்த காலத்தில் ‘பிரிவி கௌன்சிலு’க்குப் போய்க் கொண்டிருந்த நாம் இப்பொழுது தில்லிக்குப் போகிறோம். ஆனால் முதல் கோர்ட்டு கிராமமும் இறுதிக் கோர்ட்டு கடவுள் சந்நிதான மும் ஆகும்பொழுதுதான் நமக்கு சுயராஜ்யம் வந்த தாகும். கிராமத்தில் சண்டை போட்டுக்கொள்ளும் உங்க ளால் கிராமத்திலேயே அதைத் தீர்த்துக் கொள்ளவும் இயலாதா? நம் சண்டைகளைத் தீர்த்துவைக்க உலகெங்கும் சண்டைக்காரர்களென்று கியாதி பெற்றவர்களை ஏன் நாடிச் செல்ல வேண்டும்? வேலையின்மையால் திருட்டு நடக்கிறது, திருடனுக்கு கோர்ட்டில் நியாயம் விசாரித்துத் தண்டனை விதிக்கப்படுகிறது. இந்த நியாய விசாரணை செய்பவர்கள் யார்? திருடர்களையும் பார்க்க ஒருபங்கு அதிகம் வேலை அற்றவர்கள். அவர்கள் உற்பத்திப் பணி யெதுவும் செய்வதில்லை; பை பையாகச் சம்பளம் வாங்கு கிறார்கள். அவர்களின் பளு பிறர் மீது, உலகின்மீது உறைக்கிறது. அந்த ஜெயிலரும் நியாயாதிபதியும் வக்கீலும்—இவர்களெல்லோருமே வேலையற்றவர்கள். நாம் சண்டை போட்டுக்கொள்ளாவிட்டால் அவர்களுக்கு வேலை எதுவுமே இல்லாமற் போகும். நாம் நம் சண்டையை அவர்களிடம் போய்த் தெரிவித்துக்கொள்ளுவதனால் வேலையற்றவர்களின் தொகையே பெருகும். அங்கே போவதனால் நமக்கு நியாயம் கிடைக்கிறது என்ற நம் எண்ணம் தவறு.

நாம் கிராமத்தில் சண்டை போட்டுக்கொண்டாலும் அச் சண்டையை வெளியே கொண்டு போகாத நிலைக்கு கிராம ராஜ்யம் என்று பெயர். கிராமத்தில் சண்டை சச்சர வுகளே தோன்றாதிருக்குமானால் அது ராம ராஜ்யமாகும்.

நம் சண்டையை விசாரணைக்காக நகரத்திற்குக் கொண்டு போதல் நம் அடிமைத் தனத்தைக் குறிக்கும். முன்பு லண்டனுக்குப் போய்க்கொண்டிருந்த நாம் இப்பொழுது தில்லிக்குப் போகிறோம் என்பதே இப்பொழுது ஏற்பட்டுள்ள மாறுதல். இது பெரிய மாறுதலல்ல. தாகம் எடுத்த ஒருவனிடம், ஐந்து மைல் தொலைவிலிருந்த தண்ணீர் இப்பொழுது ஒரு மைலுக்கு வந்துவிட்டது; தம்பி, சிறிது பொறு" என்று சொல்லுவோமானால் அவன் என்ன பதில் சொல்லுவான்? "ஐயா அதனால் எனக்கு என்ன பயன்? தண்ணீர் ஐந்தடி தூரத்திற்கு வந்துவிட்டது என்றாலும் அதனால் என் தாகம் தணியுமா? என் நாக்கில் தண்ணீர் ஊற்றப்படும் பொழுதே என் நா வறட்சி தீரும்" என்பான். எனவே இந்த சுயராஜ்யம் தில்லிக்கு வந்துவிட்டது, கட்டாக்கிற்கு வந்துவிட்டது, ராயகட்டிற்கே ஒருக்கால் வந்திருக்கலாம். ஆனால் நாம் கிராமந்தோறும் வீடுதோறும் சுயராஜ்யம் வருமாறு செய்ய விரும்புகிறோம். அவ்வாறு அது வருதல் கதர், கிராமக் கைத்தொழில்கள் இல்லையேல் சாத்தியமில்லை; நிலத்தை அனைவருக்கும் பகிர்ந்து தராதபொழுது, கிராமதானம் நடைபெறாதபொழுது சாத்தியமில்லை; நம் சண்டைகளை நம் கிராமத்திலேயே தீர்த்துக்கொள்ள முடியாதபொழுதும் அது சாத்தியமாகாது.

குஜேந்திரி (கோராபுட்),
ஒரிஸ்ஸா. 25–9–'55

ஆச்சாரிய விநோபாபாவே அவர்களின் தமிழ் நாட்டு யாத்திரை விவரங்களையும் அவரது நல்லுரைகளையும் தாங்கி வெளிவரும் மாதாந்தரப் பத்திரிகை

“ சர்வோதயம் ”

(தமிழிலும் ஆங்கிலத்திலும்)

வருட சந்தா ரூ. 3] **[தனிப் பிரதி அணா 4**

வெளியிடுபவர் :

சர்வோதயப் பிரசுராலயம்

24, சீனிவாசபுரம்

தஞ்சாவூர்

*

தமிழ் வாரப் பத்திரிகை

“ கிராமோதயம் ”

வருட சந்தா ரூ. 3] **[தனிப் பிரதி அணா 1**

வெளியிடுபவர் :

அகிலபாரத சர்வசேவா சங்கம்

காந்திநகர், திருப்பூர்